## தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்
## மூ.மு.எண். 5682/அ1/2025 நாள் 29.08.2025.

*******

பொருள் : பள்ளிக்கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு – 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டு, காரியாவிடுதி அரசு உயர்நிலைப் பள்ளி – இளநிலை உதவியாளர் திரு.அ.மணிபாரதி என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.09851/அ1/2023,நாள்.27.09.2023.
2. காரியாவிடுதி அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியரின் கடித ந.க.எண்.35/2025 நாள்.04.07.2025.

*******

பார்வை 1 இல் காணும் செயல்முறைகளின் படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய குழுவால் 24.07.2022 அன்று நடத்தப்பெற்ற தொகுதி IV தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டம் காரியாவிடுதி அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.அ.மணிபாரதி என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண். | பெயர் பதவி மற்றும் பள்ளி/அலுவலக முகவரி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.அ.மணிபாரதி,<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு உயர்நிலைப் பள்ளி,<br>காரியாவிடுதி. | 29.09.2023<br>முற்பகல் | 29.09.2023<br>முற்பகல் |

இவ்வாணை குறித்து பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அன்னாரின் அசல் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேட்டினை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்பி வைத்திட சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு - அசல் பணிப்பதிவேடு தொகுதி–1.
(புத்தக வடிவில்)

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)
தஞ்சாவூர்

பெறுநர் - திரு.அ.மணிபாரதி,
இளநிலை உதவியாளர்,
அரசு உயர்நிலைப் பள்ளி,
காரியாவிடுதி, (உரிய வழியாக)

நகல் – தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, காரியாவிடுதி.